








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 18.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- **பிரான்ஸ்-தமிழகம்** இடையே பண்பாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம்.
    - தமிழ் கலைஞர்களின் கலை நி
    - கழ்ச்சிகள் பிரான்ஸ் நாட்டிலும், பிரான்ஸ் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் தமிழகத்திலும் நடைபெறும் வகையில், அந்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக **தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன்** தெரிவித்துள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

- **தேர்தல் விதி மீறல்களை கண்காணிக்க செயலி**
    - சட்டப் பேரவைத் தேர்தல்களில் நடத்தை விதிகள் மீறப்படுவதைக் கண்காணிக்க சிறப்புச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத் தெரிவித்துள்ளார்.
    - **சி- விஜில் C-Vigil App** எனப்படும் செல்லிடப்பேசி செயலியை தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ளது. கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்ற போது சோதனை முயற்சியாக பெங்களூரு நகரில் மட்டும் அந்தச் செயலி பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

- நாட்டில் புதிதாக நான்கு தேசிய வடிவமைப்பு நிறுவனங்கள் அமைப்பதற்காக **நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் டிசைன் National Institutes of Design (NID)** சட்டத்திருத்த 2014 மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
    - இதன் மூலம் **ஆந்திராவில் அமராவதி, மத்தியப் பிரதேசத்தில் போபால், அசாமில் ஸோர்ஹாட், ஹரியாணாவில் குருஷேத்ரா** ஆகிய நான்கு நகரங்களில் தேசிய வடிவமைப்பு நிறுவனங்கள் தொடங்கப்படவிருக்கின்றன.

- ○ அகமாபாத்தில் 1961-ம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் தேசிய வடிவமைப்பு நிறுவனத்தைப் போன்று புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களும் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

- **பேங்க ஆஃப் பரோடா, தேனா வங்கி, விஜயா வங்கி** ஆகிய மூன்று பொதுத் துறை வங்கிகளை ஒருங்கிணைத்து நாட்டின் மூன்றாவது மிகப்பெரிய வங்கியை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **இந்திய மற்றும் மால்டா** இடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.
  - ○ **கடல்சார் பாதுகாப்பு, வெளிநாட்டு சேவை** நிறுவனங்கள் **மேம்பாடு, சுற்றுலா வளர்ச்சி** ஆகிய துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது தொடர்பாக தனித்தனியே அந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- மத்திய அரசால் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாக **ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது** கருதப்படுகிறது.
  - ○ இந்திய கிரிக்கெட் அணியின் **கேப்டன் விராட் கோலி**, பளு தூக்குதல் வீராங்கனை **மீராபாய் சானு** ஆகியோரது பெயர்கள் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

- **போலந்தின் கிளிவைஸ் Gliwice** நகரில் நடைபெற்ற **சைலேஷியன் சர்வதேச குத்துச்சண்டை International Silesian Championship**

போட்டியில் மகளிர்பிரிவு 48 கிலோ எடைப்பிரிவு இறுதிச் சுற்றில் 5 முறை உலக சாம்பியன் **மேரி கோம்** 5-0 என்ற புள்ளி கணக்கில் கஜகஸ்தானின் கஸ்ஸனேயவாவை வீழ்த்தி தங்கம் வென்றார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- பிரிட்டன் நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு செயற்கைக்கோள்களுடன் **பி.எஸ்.எல்.வி.- சி42** ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவன் விண்வெளி ஆராய்ச்சி மைய முதல் ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.
  - **நோவா எஸ்.ஏ.ஆர். NovaSAR** மற்றும் **எஸ்1-4 S1-4** என்ற 889 கிலோ எடை கொண்ட இரண்டு செயற்கைக்கோள்களையும் விண்ணில் செலுத்தப்பட்டது.
  - இஸ்ரோ சார்பில் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி **பி.எஸ்.எல்.வி- சி41** ராக்கெட் மூலம் முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட **ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1ஐ IRNSS-1I Navigation** வழிகாட்டி செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- சர்வதேச ஓசோன் அடுக்கு பாதுகாப்பு தினமானது செப்டம்பர் 16-ம் தேதியன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.
  - 2018 ஆம் ஆண்டு சர்வதேச ஓசோன் அடுக்கு பாதுகாப்பு தினத்தின் கருத்தானது **Keep Cool and Carry on: The Montreal Protocol** என்பதாகும்.
  - World Ozone Day - 16th September.



We Shine Academy